**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 394** **நாள்: 17.08.2026**

**சென்னை தினத்தினை முன்னிட்டு, மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், "பெண்களுக்கான பாதுகாப்பான சென்னை" நிகழ்ச்சியினை இன்று விக்டோரியா பொது அரங்கில் தொடங்கி வைத்தார்.**

சென்னை தினத்தினை (Madras Day) முன்னிட்டு, மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகத்தின் சார்பில், பாதுகாப்பான அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பாலினச் சமத்துவத்தை மையமாகக் கொண்ட சென்னையை உருவாக்குவதில் இளம் குடிமக்களை செயலில் ஈடுபடும் பங்குதாரர்களாக உருவாக்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் "பெண்களுக்கான பாதுகாப்பான சென்னை" நிகழ்ச்சியினை இன்று (17.08.2026) விக்டோரியா பொது அரங்கில் தொடங்கி வைத்துப் பேசினார்.

இந்நிகழ்வில் இணை ஆணையாளர்கள் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., திரு.செ.சரவணன், இ.ஆ.ப., (பணிகள்), திரைப்பட நடிகை மற்றும் நாம் நிறுவனத்தின் நிறுவனர் திருமதி சுஹாசினி மணிரத்னம், டாக்டர் ரஞ்சனி மணியன், திருமதி அருணா சுப்பிரமணியன், திருமதி கிருத்திகா சுப்பிரமணியன், மாநகராட்சி பாலினக் குழு மாணவ, மாணவிகள், இராணி மேரி கல்லூரி மாணவிகள், சாம்பியன் உமன், நாம் குழுவின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின் நோக்கம், பொது இடங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்தில் பெண்களின் பாதுகாப்பு, பாதுகாப்பான பயணம், குடிமைப் பொறுப்பு, பார்வையாளர்களின் பொறுப்பு மற்றும் பாதுகாப்பான, அனைவரையும் உள்ளடக்கிய சென்னையை உருவாக்குவதில் இளைஞர்களின் பங்கு ஆகியவை குறித்து இளம் குடிமக்களிடையே கலந்துரையாடலை ஏற்படுத்துவதாகும். மாணவர்கள் தங்களது கருத்துகளை வெளிப்படுத்தவும், சமூகத்தில் முன்னுதாரணமாகத் திகழும் பெண்களிடமிருந்து கற்றுக்கொள்ளவும், பாதுகாப்பான பொது இடங்களை உருவாக்குவதில் தங்களது பங்களிப்பை வழங்கவும் இந்நிகழ்வு ஒரு தளமாக அமையும்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மாநகரின் பொது இடங்களைத் தூய்மையாகப் பராமரிப்பதில் மாணவர்கள் ஆற்றிய பங்களிப்பையும், குடிமைப் பொறுப்புணர்வையும் பாராட்டும் வகையில், சென்னை மெரினா கடற்கரையில் தூய்மைப் பணிகளில் பங்கேற்ற இராணி மேரி கல்லூரி மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

பொது இடங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்தில் பெண்களின் பாதுகாப்பு, குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாணவிகளின் நாடகம் நடத்தப்பட்டது. மேலும், பெண்களின் மேம்பாடு, பயணம், பொது பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான பொது இடங்களை உருவாக்குவதில் இளம் குடிமக்களின் பங்கு ஆகியவை குறித்து சாம்பியன் உமன்-பாதுகாப்பான சென்னை உருவாக்குவதற்கான ஊக்கம் என்ற தலைப்பில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. தொடர்ந்து, மரியாதை, சமத்துவம், பாதுகாப்பு மற்றும் பொறுப்பான குடிமக்கள் பங்கேற்பு ஆகிய மதிப்புகளை மாணவர்கள் கடைபிடிப்பதை உறுதி செய்யும் வகையில் "பாதுகாப்பான சென்னை" உறுதிமொழி ஏற்கப்பட்டது.

**இந்நிகழ்ச்சியில் ஆணையாளர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:**

சென்னை தினத்தினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது. சென்னை தினம் 1639 ஆகஸ்ட் 22, மெட்ராஸ் மாநகராட்சி உருவான முதல் தருணம். 387 வருடங்கள் தாண்டியதற்கான விழாவானது, ஆகஸ்ட் 22ஆம் தேதி வரை ஒரு வார காலத்திற்கு சென்னை தினம் கொண்டாடப்படுகின்றது.

387 வருடங்கள் பழமையானதும், உலகத்திலேயே இரண்டாவது பழைய மாநகராட்சியும் நம் சென்னை மாநகராட்சி. லண்டன் மாநகராட்சிக்குப் பிறகு வந்த மாநகராட்சி நம்ம சென்னை மாநகராட்சிதான். இந்தியாவிலேயே முதல் மாநகராட்சி. இதில் நாமெல்லாம் மிகவும் பெருமை கொள்ள வேண்டும். 387 வருடங்களில் வளர்ந்ததை விட 1947 இந்தியா விடுதலைக்குப் பிறகு பல்வேறு வளர்ச்சிகள் சென்னையில் ஏற்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் சென்னை தினத்தினை முன்னிட்டு சென்னை தினம் என்ற தலைப்பில் சென்னையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்துதல், நாம் அறக்கட்டளை நிறுவனத்துடன் இணைந்து மெரினா கடற்கரையில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளுதல், மாநகராட்சியின் கொள்கை ஆய்வகத்தின் சார்பில் விழிப்புணர்வு கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் நடத்துதல் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் எந்தவொரு திட்டமிடலிலும் பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகம் முக்கிய பங்காற்றி வருகிறது. பெண்களின் பாதுகாப்பு, பாலின நிகர் மேம்பாடு ஆகியவற்றில் ஒரு வழிகாட்டுதலாக இந்த ஆய்வகம் செயலாற்றி வருகிறது. இன்றைய நிகழ்ச்சியின் மூலம் பெண்களுக்கு பாதுகாப்பான சென்னையை உருவாக்குவதில் நாம் அனைவரும் ஒருங்கிணைந்து பங்காற்றுவோம் எனத் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி,**